# நற்றிணை போற்றிய காதல்

*மு. சந்தோஸ்குமார்*
முதலாமாண்டு முதுகலைபட்ட மாணவன், தமிழ்த்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வெட்டுக்காடு, சேந்தமங்கலம், நாமக்கல்
DOI: https://doi.org/10.5281/zenodo.13783800

**ஆய்வு சுருக்கம்**

*ஓர் அறிவு முதல் ஆறு அறிவு உள்ள உயிர்களுக்கு எல்லாம் காதல் உணர்வு உள்ளது. மரத்திற்கு காற்றின் மீது காதல். பறவைக்கு வானத்தின் மீது காதல். எறும்பிற்கு கரும்பின் மீது காதல் என்று அனைத்து உயிர்களுக்கும் காதல் என்ற உணர்வு உள்ளது என்பதே எந்தவிதமான ஐயம் இல்லை. இந்த வகையில் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான நற்றிணையில் தலைவன் தலைவியின் காதல் மேம்படுத்தி காட்டுகிறது. அந்த காதலின் உணர்வினை இவ்வாய்வு கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.*

***கலைச்சொற்கள்:*** *நற்றிணை, காதல், தலைவி.*

## முன்னுரை

*எட்டுத்தொகை நூல்களுள் முதலிடம் பெற்றுத் திகழ்வது நற்றிணையாகும். சங்க இலக்கியம் இன்பத்தின் இருப்பிடமாக திகழ்வதற்கு காரணம். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற நிலப் பாகுபாடும் இப்பாகுபாட்டை அடிப்படையாகக் கொண்டு அமைந்த மக்கள் பிரிவுகளும் திணைதுறை காட்டும் பழக்கவழக்கங்களும் இலக்கியத்தின் இன்பச் சுவையினை மிகுதி படுத்துகின்றன. நற்றிணை ஐந்து வகை திணைகளையும் சிறப்புற விளக்கும் செய்யுட்களால் அமைந்து நல் என்னும் அடை மொழியையும் அகப்பொருள் பற்றி அமைந்த திணை என்னும் பெயரும் சேர்த்து நற்றிணை என்று அழைக்கப்படுகிறது.*

## தலைவியின் காதல்

*வலியோடு கூடிய இந்த அற்புத உணர்வை நற்றிணை பாடல் வரிகளில் நாம் காணலாம். காதலனை நெடுங்காலம் பிரிந்து இருக்கிறாள். ஒரு தலைவி அவன் திரும்பி வரும் நாளை எதிர்பார்த்து ஏங்கி மெலிந்து போகிறாள் ஒரு கட்டத்தில் தன் வாழ்வு பற்றிய நம்பிக்கையையும் இழந்து விடுகிறாள். காதலனை காணாமலேயே தன் இன்னுயிர் பிரிந்து விடுமோ என்று அஞ்சுகிறாள். இந்த நிலையில் தலைவனைப் பிரிந்த தலைவி தன் ஆற்றாமையை தோலியிடம் நெஞ்சம் நெகிழ எடுத்துரைக்கிறாள்.*

*'தோழி' நான் சாவதற்கு அஞ்சவில்லை ஆனால் வேறு ஒன்றிற்காக அஞ்சுகிறேன். நான் இறந்து விட்டால் பிறகு வேறு ஒரு பிறப்பும் பிறந்தால் அந்த மறு பிறப்பில் என் காதலனை மறந்து விடுவேனோ என்பதை கூற அஞ்சுகிறேன் என்கிறாள் என்று,*

***'சாதல் அஞ்சேன் அஞ்சுவல் சாவேன்***
***பிறப்புப் பிரீந் ஆகுவதாயின்***
***மறக்குவேன் கோல் என் காதலன் எனவே'***
***- (நற்.397)***

*என்று பாடல் வரிகள் விளக்குகின்றன.*

## தலைவனின் காதல்

*தலைவியின் காதலைப் போன்றே இல்லறக் கடைமையை ஏற்று பொருள் தேடிப் பிரிந்து சென்றிருக்கும் தலைவனின் காதலையும் அவன் தலைவியின் மேல் கொண்டுள்ள பேரன்பையும் பல நற்றிணை*

பாடல்களில் காணலாம். முல்லை நிலப் பாடல் ஒன்றில் தலைவன் இல்லறக் கடமையை ஏற்று தலைவியே விட்டுப் பிரிந்து சென்றான். கடமையை முடித்து வெற்றியோடு தேரில் வீடு திரும்புகின்றான். திரும்பும் வழி காடும் காடு சார்ந்த முல்லை நிலமாகும். அந்த நிலத்தில் வரும் பொழுது லேசாக மழை பெய்கிறது. காட்டுக்கோழி ஒன்று விடியற்காலையில் தன் அலகால் கொத்திய இறையை எடுத்து தன் துணையான பெட்டைக்கு கொடுக்கும் இனிய காட்சியை இமைக்காமல் கண்கள் பார்க்கிறான். இந்த இனிய காட்சி அவன் உள்ளத்தை தொட்டு ஈரமாக்கியது. உடனே அவன் தேர் பாகனைப் பார்த்து தேர்ப்பாகவே நம்மோடு வரும் வீரர்கள் எப்படி வேண்டுமானாலும் வரட்டும். இதோ இந்த கண் கவரும் காட்சி காட்டுக கோழியின் காட்சியை பார்! இனி சிறிதும் தாமதிக்கக்கூடாது விரைவாக வீட்டிற்குச் செல்ல வேண்டும். எனவே விரைவாக குதிரையை செலுத்துவாயாக என்கின்றான் இந்த காட்சியை இளநாகனார் என்னும் புலவர்.

***'விறைப்பரி வருந்திய வீங்கு செல்ல இளையர்***
***அரைச்செறி கச்சை யாப்பு அழித்து அசைஇ***
***வேண்டும் அர நடையர் மென்மெல வருக***
***தீண்டா வைமுள் தீண்டி நாம் செலறக'***

என்று வினை முடித்து மேலும் தலைவன் தேர் பாகனுக்கு சொல்வதாக பாடியுள்ளார்.

## பெண்களின் காதல் உணர்வை கொண்டாடிய தமிழ்ச் சமூகம்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இதே தமிழ் சமூகம் பெண்களையும் அவர்களின் காதல் உணர்வையும் கொண்டாடி பாடியுள்ளது.

***இம்மை மாறி மறுமை யாயினும்***
***நீயாகியரென கணவனை***
***யானா கியரறின் நெஞ்சுநேர்பவளே!***

என மறுமையிலும் தன்னுடைய தலைவனையே கணவனாக பெற விரும்புகிறாள் ஒரு தலைவி.

அது போன்று நற்றிணையிலும் கபிலர் குறிஞ்சி திணை பாடலில் பிரிவு உணர்த்திய தோழிக்கு தலைவி கூறியது என்ற துறையில்,

***'நின்ற சொல்லர்; நிடுதோ றினியர்;***
***என்றும் என்தோள் மரியறி யளரே;'***

- (நற்.1)

தலைவன் தலைவியே விட்டுப் பிரிவான் என வருந்திய தோழிக்குத் தலைவியானவன் தன் தலைவனின் பண்புகளை உரைத்து தேற்றுதல் பெண்ணின் காதல் உணர்வுகளை ஆண் கவிஞன் மிகவும் எதார்த்தமாக பதிவு செய்கிறார்.

இவ்வாறாக பெண்களின் காதல் உணர்விற்கு மதிப்பளித்து அவ்ணர்வை கொண்டாடிப்படும் சமூக சூழலே தமிழ் நிலத்திலே முடிந்திருக்கிறது.

## காதலின் வலிமையை கூறும் நேர்த்தி

பருவ வயதில் இயற்கையாக உடலில் ஏற்படும் மாற்றத்தைப் போலவே காதல் என்பது உள்ளத்தில் ஏற்படும். மாற்றம் இந்த மாற்ற நிகழ்வு இயற்கையாக இயல்பாக நடக்கக் கூடியது. காதல் உணர்வு எதிர்பாலினத்தாரின் மீது எந்த எதிர்பார்ப்பும் இன்றி தகுதி நிலைப்பாடு பார்க்காமல் பிறந்த குடி, குலம், கோத்திரம் பார்க்காமல் ஏற்படக்கூடியது என்பதை இயற்கை தான் அனைத்திற்கும் அடிப்படை என்கிற தத்துவத்தை உணர்ந்த சமூக மனிதர்களால் மட்டுமே ஏற்றுக் கொண்டு கொண்டாட இயலும்.

***'யாயும் நாயும் யார் ஆகியரோ?***
***எந்தையும் நுந்தையும் எம்முறை கேளிர்?***
***யானும் நீயும் எவ்வழி அறிதும்?***
***செம்புலப் பெயல் நீர் போல***
***அன்புடை நெஞ்சம் தம் கலந்தனவே'***

- (குறு.40)

உன்னையும் என்னையும் பிரிக்கின்ற சக்தி இந்த உலகத்தில் யாருக்கும் இல்லை உன்னை பெற்ற தாய் யார் என்று எனக்குத் தெரியாது. தந்தை யார் என்று தெரியாது. உன் தந்தைக்கும், என் தந்தைக்கும் என்ன உறவு முறை என்று தெரியாது. ஆனால் செம்மண் நிலத்தில் பொழிந்த மழை நீரானது அந்த நிலத்தின் தன்மையை ஏற்றுக் கொள்கிறது.

பின்னர் யாராலும் பிரிக்க இயலாது. அது போல் நமக்குப் பிரிவு இல்லை என்று குறுந்தொகையில் புலவர் செம்புலப் பெயல் நீரார் பாடியிருக்கிறார். அன்றைய காதலின் வலிமையை இதனை மூலம் நன்கு உணர முடிகிறது.

## நற்றிணையில் நம்பிக்கைகள்

தமிழரின் நம்பிக்கைகள் பல நன்மை அறியாமையிலே நம்முறையே தற்போதும் தொடர்ந்து வருகின்றன. அவற்றிற்கு ஆதாரமாக நற்றிணை, புறநானூறு மற்றும் அகநானூறு சிலப்பதிகாரம் போன்ற நூல்களின் பதிவுகள் வாயிலாக அறிய முடிகிறது. அவற்றின் அனுபவ ரீதியிலும் காண்கிறோம்.

நற்றிணையில் தலைவியை பிரிந்து சென்ற தலைவன் விரைவில் வருவான் என்று முன்னறிவிக்கும் செயலாக குயில் கூவுதல் நல்ல சகுனமாக பார்க்கப்பட்டிருப்பதனை,

'**மமைமா நெச்சி மீமிசை மாச்சினை**
**வினைமான் இருங்குயிங்; பயிற்றலும் பயிற்றும்**'
- (நற்.246)

என்ற பாடலடிகளில் தலைவன் பிரிவால் மெலிந்த தலைவிக்கு தலைவன் திரும்பும் அறிகுறிகளை கூறி தோழி ஆறுதல் படுத்துவதாக அமைகிறது. இதோ போன்று சிலம்பிலும் நம்பிக்கைகள் குறிக்கப்பட்டிருக்கிறது.

**கள்ளுக நடுங்குங் கழுநீர் போலக்**
**கண்ணகி கடுங்கனும் மாதவி செங்கனும்**[3]

என்ற அடிகளில் கண் துடித்தல் சகுணம் கூறப்பட்டுள்ளது. பெண்களுக்கு இடைக்கண்ணும் ஆண்களுக்கு வலக்கண்ணும் துடித்தால் நம்மை என இன்றும் நம் தமிழர்களின் வழக்குகளில் இருப்பதை காண்கிறோம். சிலப்பதிகாரத்தில் காலத்தில் எச்சமாக இதனை நாம் குறிப்பிடலாம்.

## நற்றிணையின் தூது

அன்றைய அரசர்கள் காலம் முதல் இன்றைய மக்களாட்சிக் காலம் வரை தூது என்ற நிகழ்வு உண்டு சங்க இலக்கியம் சுட்டிக்காட்டும் காதலர் வாழ்வில் தூதும் இடம்பெற்று இருக்கிறது.

நற்றினையில் தலைவன் பிரிவான் எனக் கருதி தலைவி வருந்தினாள். அதனைக் கண்ட தோழி தலைவியது வேறுபாட்டை அறிந்தவன் பிரிய மாட்டான் என ஆறுதல் கூறுகிறாள்.

'**இருளையர்த் தரூஉம் வாடையோடு**
**மயங்கிதழ் மழைக்கண் பாய்ந்த தூதே**'
- (நற்.5)

தலைவன் பிரிந்து சென்று விடுவானோ என்ற வருத்தத்தில் தலைவி அழுகிறாள். அவள் அழுகை மேகத்திற்கு தூதாக அமைந்து பெருமழை பெய்து தலைவனை தடுத்து நிறுத்தியது என்று கவிஞர் நயம்பட பாடியிருக்கிறார்.

சங்க இலக்கியங்களில் காதல் வளர்ச்சிக்கு தூது இன்றி அமையா பங்கு வகித்து உள்ளது.

## முடிவுரை

அந்த இனம் காதலை கொண்டாடுகிறதோ அதுவே மனிதன் பேணும் இனமாக இருக்கும். காதல் என்பது செயல் அன்று ஏன் உணர்வும் ஒன்று காதல் என்பது நாகரிகம் அந்த வகையில் தமிழ் சமூகம் நனி நாகரிகச் சமூகமாக சங்க நாகரீகமாக அமைந்திருந்தது.

## சான்றெண் விளக்கம்

1. நாகராசன். வி, குறுந்தொகை, பா. 49, ப. எ. 129.
2. மேலது, பா. 40, ப. எ. 109.
3. வேங்கடசாமி நாட்டார். ந. மு, பா. 235, ப.142.

## துணை நூற்பட்டியல்

1. நாகராசன். வி முனைவர் - குறுந்தொகை நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பி லிட், 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட் அம்பத்தூர், சென்னை - 600 098.
2. பாலையன். அ. ப - நற்றினை சாரதா பதிப்பகம், சென்னை - 14
3. வேங்கடசாமி நாடார் - சிலப்பதிகாரம் இளங்கணி பதிப்பகம், சென்னை - 600 015.